REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.I.

மலர் 5] சென்னை : மார்கழி 4உ வியாழன் (19—12—57) ★ ★ வெளியூர் : மார்கழி 5உ வெள்ளி (20—12—57) [இதழ் 161

புற்றுநோயும் புகையிலையும்

புதுடில்லி, டிச. 18—

புற்றுநோய்க்குக் காரணமாக புகையிலைப் பழக்கம் இருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை என்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக சுகாதார மந்திரி கார்மார்கர், மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

சிகரெட், பீடி பிடிப்பது புற்றுநோயை அதிகரிக்கும் என்பதில், அவற்றின் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்போரைத் தவிர வேறு எவருக்கும் சந்தேகம் இல்லை ; 'ஆராய்ச்சியின் முடிவும் அதுதான்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பெரியாரை விடுவிக்க மனம் இருந்தால் மார்க்கமுண்டு

நாகரிக சர்க்காராயிருந்தால் நிபந்தனையின்றிவிடுவிக்கவேண்டும்

சட்டத்தை மதித்து நடப்பதில் பெரியாரைப் போல் வேறு எவரும் இல்லை

தி. மு. க. நிலைபற்றி அண்ணா விளக்கம்

சேலம், டிச. 19—

"தங்களுக்கு அதிகாரம் இல்லையென்று காமராசர் சர்க்கார் வினைக எந்தக் காரியத்தையும் தட்டிக்கழிக்கிறது. சிறையிலுள்ள 3,000 திராவிடர் கழகத்தினரையும் விடுதலை செய்ய காமராசர் சர்க்காருக்கே அதிகாரம் உள்ளது.

"ஜாதிப் பெயர்ப் பலகைகள்போடும் ஓட்டல்களுக்கு'லைசென்ஸ்' வழங்கக் கூடாது என உள்ளாட்சி மன்றங்களுக்கு உத்தரவிட சென்னை அரசாங்கத்திற்கே, அதிகாரம் உள்ளது; சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவும் காமராசர் சர்க்காருக்கே அதிகாரம் உள்ளது.

"'1965-க்குப் பின் ஆங்கிலத்தை எடுத்துவிடக் கூடாது; ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும்' என்று, எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களையும் கலந்து பேசிய பிறகு, மத்திய அரசாங்கத்திற்குக் காமராசர் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

"தங்களுக்குத் தேவையானவைகளை காமராசர் ஆட்சி செய்கிறது; ஆனால், தங்களுக்கு விருப்பமில்லாதவைகளை தங்களுக்கு அதிகாரமில்லை என்று சொல்லி தட்டிக்கழிக்கிறது.

"மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி காட்டியோ, மந்திரிகளின் வீட்டில் மறியல் செய்தோ, மற்றும் கிளர்ச்சிகள் செய்தோ 10 அல்லது 15 தினங்களில் பெரியாரையும், சிறையில் உள்ள திராவிடர் கழகத்தினரையும் திராவிட முன்னேற்றக் கழகத்தால் விடுதலை செய்யமுடியும்; ஆனால், 'காமராசர் மந்திரி சபைக்கு எதிராக எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது' என்று பெரியார், சிறைக்குச் செல்வதற்குமுன் சொல்லிச் சென்றுள்ளார். ஆகவே காமராசர் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யாமல் எப்படி பெரியாரை விடுதலை செய்யமுடியும் ?"

என்று, சேலம்—அரிசிபாளையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சேலம் அரிசிப்பாளையத்தில் 5-வது வட்ட தி. மு. கழக ஆண்டு விழா 15—12—57-ந் தேதியன்று சேலம் நகர தி. மு. க. செயலாளர் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் பிற்பகுதி தோழர் ஏ. சித்தையன் தலைமையில் நடைபெற்றது. (தோழர் ஏ. சித்தையன் கூட்டத்திற்கு வர தாமதம் ஏற்பட்டதால் தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் முதலில் தலைமை வகித்தார்.)

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் தி.மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

அடுத்து அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"இன்றையத் தினத்தில் இங்கு (அரிசிப்பாளையத்தில்) ஒரு கூட்டமும், சேலம் கோட்டையில் மற்றொரு கூட்டமும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒரு நாளில் ஒரே ஊரில் இரண்டு கூட்டங்களில் பேசவேண்டியதில்லை.

"இங்கு குறுகிய இடத்தில் கூட்டத்தை ஏற்பாடு செய்திருப்பதால் மக்கள் திரள் அதிகமாக வந்து, நெருக்கடியாக உட்கார்ந்துகொண்டு, ஆர்வம் குறையாமல் தி. மு. கழகக் கொள்கைகளைக் கேட்க இருக்கிறார்கள். மந்திரிமார்களுக்கு இம்மாதிரி குறுகிய இடத்தில் கூட்டம் போட்டால்தான் சுமாரான மக்கள் கூட்டமாவது வரும்(சிரிப்பு). நம் கழகம் வளர்ந்துவிட்ட காரணத்தால் இம்மாதிரி இரண்டு மூன்று இடங்களில் ஒரே நாளில் கூட்டம் போடுகிறார்கள்; ஒரு நாளில், ஒரு ஊரில், ஒரு கூட்டத்தில் பேசினால் போதும் என்று நினைக்கிறேன்.

"சட்டப்புத்தக எரிப்புப் போராட்டத்தில் சுமார் 3,000 திராவிடர் கழகத் தோழர்கள் சிறை சென்றுள்ளார்கள். சிறை சென்றுள்ள திராவிடர் கழகத் தோழர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

"யார் எந்தக் கழகத்தில் இருந்தாலும் அந்தக் கழகத்தின் போராட்ட காலங்களில் சிறை செல்ல தயாராக இருக்கவேண்டும்; சிறைசெல்லவும் தயங்காத இதயம் படைத்தவர்கள்தான் ஒவ்வொரு கழகத்திலும் இருக்கவேண்டும். போராட்டக் காலங்களில் சிறை செல்ல அஞ்சுகின்றவர்கள் அவர்கள் இருக்கும் கழகத்திற்கே இழுக்கைத் தேடிக் கொடுப்பவர்களாவார்கள்.

"திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தில் சுமார் 3,000 பேர்வரை சிறை சென்றதை நான் பாராட்டுவதால், அவர்கள் போராட்டத்தை நான் ஆதரித்ததாக அர்த்தமில்லை; அவர்கள் (தி. க.) போராட்டத்தை நான் ஆதரிக்கவில்லை.

"திராவிடர் கழகத்திலிருந்து தி. மு. கழகம் பிரிந்து 8 ஆண்டுகள் ஆகின்றன; தி. மு. கழகத்தினர் வீட்டில் என்னுடைய படமும், பெரியார் படமும் இருக்கும்; ஆனால் திராவிடர் கழகத்தினர் வீட்டில் பெரியார் படம் மட்டும் இருக்கும் ; என் படம் இருக்காது.

"திராவிடர் கழகத்தினர் 'விடுதலை' தின இதழைமட்டும் படிப்பார்கள்; 'நம் நாடு' தின இதழை படிக்கமாட்டார்கள் ! ஆனால் தி.மு. கழகத்தினரோ, 'விடுதலை'யையும், 'நம் நாடு' தின இதழையும் படிப்பார்கள்! இவற்றை எதற்குச் சொல்கிறேன் என்றால், திராவிட கழகத்தினர், மற்றவர்களின் கருத்தைத் தெரிந்துகொள்ளவும், மற்றவர்கள் கருத்துக்கு மதிப்பு கொடுக்கவும் விரும்புவதில்லை; மற்றவர் கருத்துக்கு மதிப்பு கொடுக்கும் வழக்கம் தி.மு. கழகத்தினரிடம் உண்டு. என்பதை இவை குறிக்கின்றன.

"திராவிடர் கழகத்தினர் சுமார் 3,000 பேர் சிறை சென்றதைப் பாராட்டுவதால், தி. மு. கழகத்தில் போராட்ட காலங்களில் சிறைசெல்வோர் எண்ணிக்கை குறைவு என்று எண்ணாதீர்கள். தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் சுமார் 5,000 பேர் சிறை சென்றிருக்கிறார்கள். ஆகவே போராட்ட காலங்களில் சிறைசெல்ல தி. மு. கழகத்தில் உள்ளவர்கள் தயங்கியதில்லை.

"ஏறக்குறைய 80 வயதான பெரியார் அவர்கள் சிறைக்குச் செல்லும் போதெல்லாம் நானும் கூடவே சிறைக்குச் சென்றிருக்கிறேன். தி. மு. கழகம் திராவிடர் கழகத்தைவிட்டுப் பிரிந்த பிறகுகூட, 'பொன்மொழி' என்ற புத்தகம் எழுதியதற்காக பெரியார் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 'ஆரிய மாயை' எழுதியதற்காக நானும் சிறையில் அடைக்கப்பட்டேன். சுமார் 10 தினங்கள் சிறையில்—பக்கத்து பக்கத்து அறைகளில் நானும், பெரியாரும் வைக்கப்பட்டு இருந்தும்கூட நானும் பெரியாரும் பேசிக் கொள்ள வில்லை. எனக்கு வெளியிலிருந்து ஏதாவது உணவு கொண்டுவந்து கொடுக்கப்படுகிறதா என்று பெரியார் சிறை வார்டரிடம் கேட்டார்; 'அவருக்கு ஒன்றும் வெளியிலிருந்து பிஸ்கட்டோ, உணவோ வருவதில்லை' என்று வார்டர் சொன்ன பிறகு, தனக்குவந்த பிஸ்கட்டுகளில் 6 பிஸ்கட்டுகளை எனக்குக் கொடுக்கும்படி வார்டரிடம் கொடுத்தனுப்பினர். அந்தப் பிஸ்கட்டுகளை நான் சாப்பிடாமல் அவை உதிர்ந்துபோகின்ற வரையில் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். என்னை திராவிடர் கழகத்தினர் திட்டும்போதெல்லாம், அந்தப் பிஸ்கட்டுகளை எடுத்துப் பார்த்துக்கொள்வேன்; 'நீங்கள் (தி. க.) திட்டுகிறீர்கள்; ஆனால், பெரியார் என்னிடம் அன்பு வைத்திருக்கிறார்; சூழ்நிலை, அவர் என்னிடம் பேச விடாதபடி செய்கிறது' என்று எண்ணிக்கொள்வேன்.

"இந்தத்தடவைதான் நான் பெரியாருடன் சேர்ந்து சிறைக்குச் செல்லமுடியவில்லை; காரணம் பெரியாரின் போராட்டத் திட்டம் எனக்குப் பிடிக்காததால் நான் பெரியாரின் போராட்டத் திட்டங்களில் பங்கு கொள்ள முடியவில்லை.

"திராவிடர் கழகத்தில் நான் இருந்தபோதே சில கொள்கைகளை எதிர்த்து என் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறேன். 'ஆகஸ்டு 15-ல் துக்க தினம் கொண்டாடுங்கள்' என்று பெரியார் அறிக்கை விட்டபொழுது, ஆகஸ்டு 15-படிக்காவிட்டால்—சுதந்தர தினத்தைக் கொண்டாடாவிட்டாலும் பரவாயில்லை; துக்க தினம் கொண்டாடாமல் ஒதுங்கியாவது இருங்கள்' என்று நான், 'திராவிடநாடு' பத்திரிகையில் அறிக்கை விட்டேன்; 'பெரியாரின் கருத்துக்கு மாறாக எப்படி அறிக்கை விடலாம்' என்று பலர் என்னிடம் கேட்டார்கள்; 'கருத்து வேற்றுமையை வெளியிடுவதில் தவறில்லை; என்மீது தவறு என்று நினைத்தால் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, திராவிடர் கழகத்திலிருந்து என்னை வெளியேற்றுங்கள்; நான் தனியாக வெளியே சென்றாலும், திராவிடர் கழகத்தின் கொள்கைக்காகத்தான் பாடுபடுவேன்' என்று சொன்னேன்; ஆனால் என்னை, தி. க.-விலிருந்து அப்பொழுது வெளியேற்றவில்லை.

"ஆகையால், திராவிடர் கழகத்தின் சட்டப் புத்தக எரிப்புப் போராட்டத்தை, என் கொள்கைக்குப் பிடிக்காததால் ஆதரிக்கவில்லை. சென்னை சட்டசபையில் சட்டப் புத்தக எரிப்புப் போராட்டத்தை ஒடுக்கப் புதிய சட்டம் வந்தபொழுது, நான் அதை எதிர்த்தேன். அப்பொழுது, எங்கள் (தி. மு. கழகம்) உண்மை சொரூபத்தைத் தெரிந்து கொள்ள முடிந்ததாக நிதியமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார். அவ்வளவு சுலபத்தில் எங்களை அளவுகோலால் அளந்துவிட முடியாது. காரணம், தவறான அளவுகோலை வைத்து, அளந்துபார்க்க எண்ணுகிறார்கள்.

"சாதிகள் கூடாது என்று காமராசரும், பண்டித நேருவும், பெரியாரும், மற்றும் பலரும் கூறுகின்றனர். சாதிகளை ஒழிக்க எல்லாக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்ற இதைவிட வேறு சந்தர்ப்பம் கிடைக்காது.

"'சாதிகளை ஒழிக்க நடவடிக்கை எடுக்க சட்டப் புத்தகத்தை எரிக்க வேண்டும்' என்று பெரியார் சொன்னர் ; ஆனால், சட்டப் புத்தகத்தை எரித்து சுமார் 3,000 பேர் சிறை புகுந்தும் சாதிகள் அப்படியே இருக்கின்றன.

"பெரியாருக்கு ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது ; இனி நமக்குத் தான் பொறுப்பு அதிகமுண்டு.

"'10 பிராமணர்களைக் கொல்வதாலோ, அக்கிரகாரத்திற்கு நெருப்பு வைப்பதாலோ சாதிகள் ஒழியாது' என்று சிறைக்குச் செல்வதற்குமுன் சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் பெரியார் குறிப்பிட்டுள்ளார். பலாத்காரத்தில் இறங்குவதில் பலனில்லை என்பது பெரியாருக்குத் தெரிந்துவிட்டது.

"கலப்புத் திருமணம் செய்துகொண்டால் சாதிகள் ஒழியும். ஆதித் திராவிடப் பெண்ணை ஒரு செட்டியாரோ ஒரு முதலியாரோ மணந்துகொண்டால், அவர்கள் தங்கள் தெருக்களிலேயே தங்கள் துடித்தனம் நடத்த வேண்டும்; அதற்கு மற்றவர்கள் ஆதரவு தர வேண்டும். கீழ் சாதிப் பெண்ணை மணந்துகொண்டார் என்பதற்

(4-ம் பக்கம் பார்க்க)

கே.ஏ.மதியழகன்-தில்லைவில்லாளன் இலங்கை செல்வார்கள்

ஜனவரி 10-ந் தேதி வாக்கில் புறப்படுவர்

சென்னை, டிச. 19—

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும், தோழர் தில்லை-வில்லாளன் அவர்களும், அகில இலங்கை பகுத்தறிவு இயக்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை புறப்பட இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஜன. 14, 15-ந் தேதிகளில் நடைபெறும் பொங்கல் விழா நிகழ்ச்சிகளில் முதன் முதலில் கலந்துகொள்வார்கள்.

சுமார் இரண்டு வாரங்கள் தங்கி இருந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலுள்ள கல்லூரிகள், மற்ற அமைப்புகளின் சார்பில் நடைபெறும் கூட்டங்களில் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

ஜன. 10-ந் தேதி வாக்கில் சென்னையிலிருந்து விமானம் மூலம் இலங்கை புறப்படக் கூடும் என்று தெரியவருகிறது. (ந-நி.)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—12—57 வியாழன்

மனமாற்றத்தின் உள்ளடக்கம்

“பஞ்சாயத்துத் தலைவர்களை கிராமத்தில் உள்ள மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதா? அல்லது பஞ்சாயத்து உறுப்பினர்கள் பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுப்பது சரியா? உங்கள் பஞ்சாயத்தின் கருத்தென்ன?”

இவ்வாறு, சென்னை மாநில தலத்தாபன ஆணையாளர்,தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்துக்களைக் கேட்டிருக்கிருர் எனத் தெரியவருகிறது.

இக்கேள்விக்கு, எத்தகைய பதிலை தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி மன்றங்கள் அளிக்கப் போகின்றன என்பது ஏற்கனவே தெளிவுபடத் தெரிந்துவிட்ட ஒன்ருகும். அப்பதில், பஞ்சாயத்துத் தலைவர்களை கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதையே ஆதரிப்பதாகத்தான் இருக்க முடியும்.

இத்தொடர்பில், சில உண்மைகளை நாம் தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

1950-ம் ஆண்டுவரை, அப்பொழுது நடைமுறையில் இருந்துவந்த பஞ்சாயத்துச் சட்டப்படி, பஞ்சாயத்தின் தலைவர்களை, பஞ்சாயத்துக்களின் உறுப்பினர்களே தேர்ந்தெடுத்துவந்தனர். ஆனல், 1950-ம் ஆண்டு திருத்தச் சட்டப்படி, அம்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, பஞ்சாயத்துத் தலைவர்களை கிராம மக்கள் அனைவரும் கூடி நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை மேற்கொள்ளப்பட்டது.

பஞ்சாயத்துத் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் இம்முறையை, சென்ற சட்டசபைக் கூட்டத்தில், புதிய திருத்தம் ஒன்று கொண்டுவந்து, பஞ்சாயத்துத் தலைவர்களை பஞ்சாயத்து உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பது என்ற பழைய முறையை சட்டமாக்கிவிட்டது சென்னை அமைச்சரவை.

பஞ்சாயத்துத் தலைவர்களை கிராமமக்கள் அனைவரும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற முறைக்குப் பதிலாக பஞ்சாயத்து உறுப்பினர்ளே தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற புதிய முறையைத் தாங்கள் ஏன் ஆதரிக்க முன்வந்தார்கள் என்பதை அமைச்சர்கள் தெளிவுபட விளக்கவே இல்லை. ‘நாங்கள் எதை விரும்பினலும் சட்டமாக்கிவிட எங்களிடம் பெரும்பான்மை இருக்கிறது—எங்கள் மனம் சென்றபடி எதையும் நாங்கள் சட்டமாக்கிக் கொள்ளுவோம்’ என விளக்கமளிப்பது போன்றுதான், புதிய திருத்தத்தின்மீது அமைச்சர்கள் பேசிய பேச்சு அமைந்திருந்தது. நிற்க,

இப்புதிய திருத்தச் சட்டத்தை 1—12—59 வரை நடைமுறைக்குக் கொண்டு வராது இருக்கவேண்டும் என்ற ஒரு திருத்தம் சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சரவை கூறினதுடன், அத்திருத்தத்தைத் தோற்கடிக்கவும் செய்தது.

அத்திருத்தத்தை எதிர்த்துப் பேசிய அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், புதிய பஞ்சாயத்துத் திருத்த மசோதாவை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவந்து, அதன் அடிப்படையில் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்திவைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும், எனவே, எதிர்க்கட்சியினர் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மிகமிகத் தெளிவாகக் கூறினர்.

ஆனல், இன்று, கட்டுரை தலைப்பில் குறிப்பிட்டுள்ளது போல், பஞ்சாயத்துக்களின் கருத்தறியும் முயற்சியில், தலத்தாபன ஆணையாளர் ஈடுபட்டுள்ளார். இதை, வியப்புக்குரியதாகத்தான் எவரும் கருதுவர். நிற்க;

பஞ்சாயத்து உறுப்பினர்களைக் கொண்டு மட்டுமே பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அமைச்சர் அவையின் கருத்தை, சென்னை மாநிலப் பஞ்சாயத்து நிறுவனம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு மாருக, அண்மையில்கூடிய மாநாட்டில், பஞ்சாயத்துத் தலைவர்களை முன்போல் கிராம மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை சென்னை மாநிலப் பஞ்சாயத்து நிறுவனம் நிறைவேற்றியது.

தீர்மானத்தின் வாசகம், கட்டளையிடுவதுபோல் அமைந்திருக்கவில்லை; வேண்டுகோள் உருவத்தில் நயமான சொற்களைக் கொண்டு அமைந்திருக்கிறது. இம் மனுமுறையையும், கனிவுடைய சொற்களையும் கண்டுதான் காங்கிரசு அமைச்சரவை மனம் மாறி இருக்கிறது என நாம் கூறப்போவதில்லை. அப்படி நாம் கூறினலும், அதை மெய்ப்பிக்க அமைச்சரவையின் முன்னுள் செயலில் ஒரு சிறு சம்பவமும் கிடையாது.

ஆனல், அமைச்சரவையின் இப் புதுக்கோலத்திற்கு என்ன காரணம்? மாநிலப் பஞ்சாயத்து நிறுவனத்தில் தலைவராக இருந்துவருகிறவர் திருமங்கலம் இராசாராம் அவர்களாவார். அவரேதான் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவராகவும் இருந்துவருகிருர்.

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்துவரும் ஒருவரைத் தலைவராகக் கொண்ட மாநிலப் பஞ்சாயத்து நிறுவனம், தனது மாநாட்டில், காங்கிரசு அமைச்சரவை நிறைவேற்றிய ஒரு முக்கிய சட்டத்தைத் திருத்த வேண்டும். நிறுத்திவைக்கவேண்டும் எனத் தீர்மானித்திருப்பது, குறிப்பிட்ட சட்டத்தைத் திருத்துவதா கூடாதா என்ற பிரசினையுடன் முடிவடைந்துவிடக்கூடியதல்ல. காங்கிரசு சட்டசபைக் கட்சிக்கும், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சிக்கும் இருந்துவரும் செயல்முறை முரண்பாட்டையும், நலிந்த உறவுமுறையையும் அம்பலப்படுத்திக் காட்டக்கூடியதாகும் அத்தீர்மானம்.

அதுவுமன்றி, பஞ்சாயத்து நிறுவன மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் தவிர, மற்றவர்கள் அனைவரும் ஆளும் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். அதாவது, மாநாட்டில் கலந்து கொண்ட எழுநூறு பிரதிநிதிகளில் தொண்ணூற்றைந்து சதவிகிதத்தினர் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்களில், குறிப்பிட்ட தீர்மானத்தை எதிர்த்தவர் ஆறே ஆறு காங்கிரசு கட்சியினர்தான. மற்றவர்கள் அனைவரும் தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களித்துள்ளனர் தீர்மானத்தை ஆதரித்துப் பேசின சில காங்கிரசுக்கட்சியினர்,நிறைவேற்றப்பட்டுள்ள புதிய விதி திருத்தப்படவில்லையானல் அரசாங்கத்துக்கு எதிராக நேரடி நடவடிக்கையில் தாங்கள் ஈடுபடத் தயாராக இருப்பதாகவும் ஆத்திரத்துடன் அறிவிததனர்.

பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் காங்கிரசு அமைச்சர்களின் கருத்து ஒன்ருகவும், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மற்றவர்களின் கருத்து அதற்கு நேர்மாருகவும் இருக்கிறது என்ற உண்மையை மாநாட்டுத் தீர்மானம் வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது.

எனவே, காங்கிரசு அமைச்சரவையும் பஞ்சாயத்துக்களின் கருத்தறியும் முனைப்பில் ஈடுபட்டிருக்கிறது.

அமைச்சரவையின் மனமாற்றம் சனநாயகத்தின்பாற்பட்டதா, அல்லது கட்சிப் பாதுகாப்பின்பாற்பட்டதா? என முடிவுகட்டும் பொறுப்பை வாசகர்களுக்கே விட்டுவிடுகிறோம்.

ஊழல்! ஊழல்!! ஊழல்!!!

‘எங்கும் எதிலும் ஊழல்!’

ஆயுள் ‘இன்ஷ்யூரன்ஸ்’ நிறுவன நிதி மோசடி?

ஒன்றரை கோடி ரூபாய்க்கு பங்கு மார்க்கெட்டில் சூதாடினர்களாம்!

மக்கள்சபையில் காங்கிரஸ் உறுப்பினர்களே அம்பலப்படுத்துகின்றனர்

புதுடில்லி, டிச. 16—

சர்க்கார் நடத்துகிற ஆயுள் ‘இன்ஷ்யூரன்ஸ்’ நிறுவன நிதியிலிருந்து ரூ. 1·56 கோடிக்கு, ‘முந்திரா நிறுவன’ங்களின் பங்குகள் வாங்கப்பட்டனவாம்!

இந்த வெட்கக்கேட்டினை, காங்கிரஸ் உறுப்பினரான பேரோஸ்காந்தி, மக்கள்சபையில் அவசரப் பிரரேபணை ஒன்று கோண்டுவந்து வன்மையாகக் கண்டித்திருக்கிருர்.

இந்த பங்கு பேரம் நடத்தப்பட்டது பற்றி ஒரு விசாரணை நடத்துவதற்கு நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஒப்புக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

பெரோஸ் காந்தி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“இந்தப் பேரத்திற்கு, ‘இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன்’ எப்படிச் சம்மதித்தது என்பதே தெரியவில்லை; முன்பு ஒரு முறை நிதி மந்திரி, எந்த ஒரு தனி நபருக்கும் சலுகை காட்டுவதற்காக நிறுவன நிதி பயன்படுத்தப்படமாட்டாது என்றும், நிறுவன நிதியை முதலீடு செய்வது என்பது, நிறுவனத்தின் இலாபத்திற்காகத்தான் இருக்கும் என்றும் உறுதி கூறியிருந்தார்; ஆனல், இந்த ஆண்டில் மட்டும், 19 தடவைகள், இதே ‘முந்திரா நிறுவன’ங்களிடம் ரூ. 1·56 கோடி பெறுமான பங்குகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

இது தனி ஒரு நபருக்கு காட்டப்படும் சலுகை ஆகாது என்ருல், அந்த சலுகை என்பது வேறெதைக் குறிக்கும்?

“பங்கு வாங்கப்பட்ட அந்த நிறுவனத்தின் பொருளாதார நிலையாவது உறுதியானதா என்ருல், இல்லை; பங்கு வாங்கிய இரண்டு மாதத்திற்குள்ளாக, அந்த நிறுவனத்தைக் கண்காணிக்க சர்க்கார் நிர்வாகிகளையும் நியமிக்க வேண்டிய இலட்சணத்திலிருக்கிறது.”

மற்ருெரு காங்கிரஸ்காரரும் முன்னுள் மந்திரியுமான மகாவீர் தியாகி, ‘இந்த வெட்கக்கேட்டிற்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்; விசாரணை நடத்த வேண்டும்” என்று முழங்கியிருக்கிருர்!

மற்ருெரு காங்கிரஸ்காரரான ராம் சுபா சிங் என்பார், ‘இந்த ஆட்சியில் பெயர்போன ஊழல்கள் மூன்று—ஒன்று, ஜீப்கார் ஊழல்; சர்க்கரை பேர ஊழல்; இந்தக் கார்ப்பொரேஷன் பங்கு வாங்கியது, மூன்ருவது ஊழல்”—என்றுகூறி, காங்கிரஸ் நிர்வாகத்திற்குச் சூடு தந்திருக்கிருர்.

மற்றும், அசோக மேதா டாங்கே முதலியவர்களும், ‘மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்குத் துரோகமிழைப்பதாகும்’ என்ற இந்த வெட்கக்கேட்டைக் கண்டித்திருக்கின்றனர்.

இவற்றிற்குப் பதிலளித்த நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி, இது பற்றி ஒரு விசாரணை நடத்தத் தான் சம்மதிப்பதாயும், ஆனல், விசாரணை எப்போது நடத்துவது என்பதை நிர்ணயிப்பதை சர்க்காரிடம் விட்டுவிட வேண்டும் என்றும் கூறிஞராம்!

பங்குகள் வாங்கப்பட்டதை நியாயப்படுத்த அவர் முயற்சித்த போது, காங்கிரசார் உட்பட பலர் குறுக்கிட்டு, ‘ஊழல், ஊழல்’ எனக் கூறியிருக்கின்றனர்!

வ ட நா ட் டி ல் எண்ணெய் கண்டுபிடிப்பு

மக்கள்சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 18—

பஞ்சாப் மாநிலத்தில் ஜ்வாலாமுகியில் எண்ணெய் வளம் உள்ளதா என்பதைக் கண்டறிய 5,200 அடி ஆழத்திற்குக் கிணறு வெட்டப்பட்டுள்ளதாம்.

இதுவரையில் இந்த வேலைக்கு ரூ 84,80,000 செலவாகியுள்ளதாம்.

இதுகுறித்து மக்கள்சபையில் கேள்வி ஒன்று கேட்கப்பட்ட போது, ஏப்ரல் திங்களுக்குள் 10,000 அடிவரை கிணறு வெட்டி முடித்தபின்னர்தான், எண்ணெய் கிடைக்குமா என்பதைப் பற்றி முடிவாகக் கூற இயலும் என்று அரசாங்க எண்ணெய் வள அமைச்சர் மாளவியா தெரிவித்துள்ளார்.

கிரோசின் எண்ணெய் விநியோகம் பற்றி ருமேனிய சர்க்காருடன் இந்திய சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சோப்பு ஏற்றுமதி

குறைந்துவருவதாகத் தகவல்

சென்னை, டிச. 17—

இந்தியாவிலிருந்து 1957-ம் ஆண்டின் முதல் ஆறுமாதங்களில் ரூ. 4,52 145 பெறுமான சோப்பு ஏற்றுமதியாயிற்று என்று கூறப்படுகிறது.

1954-55 ஆண்டில், ரூ. 14 57 644 பெறுமான சோப்பு ஏற்றுமதியாயிற்று என்றும், ஆனல் இது 1955-56-ல் ஆண்டில் ரூ. 9,67,729 என்ற அளவுக்குக் குறைந்துவிட்டது என்றும் கூறப்படுகிறது.

24,037 பேர் புதைக்கப்பட்டனராம்!

6,571 எரிக்கப்பட்டனராம்!

சென்னை, டிச. 18—

சென்னை நகரசபையின் எல்லைக்குள் மொத்தம் 48 மயானங்கள் தனியாருக்குச் சொந்தமாக உள்ளன என்றும், 31 மயானங்கள் பொதுவாக உள்ளன என்றும் சென்னை நகரசபைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் மொத்தம் 30,608 பேர் இறந்துபட்டனர் என்றும், இவர்களில் 24,037பேர் புதைக்கப்பட்டனர் என்றும், 6,571 பேர் எரிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெட்டப்படும் திட்டம் பெறும் புதிய உருவம்?

இப்போது வருணிக்க முடியாதாம்

புதுடில்லி, டிச. 16—

இரண்டாம் திட்டம் எந்த அளவுக்கு வெட்டப்படும்—புதிய உருவம் எப்படி எல்லாம் இருக்கும என்பதுபற்றி சர்க்காரிலிருப்பவர்கள் தருகிற—ஒன்றுக்கொன்று முரண்பட்ட அறிக்கைகள் மக்களுக்குப் பெரும் குழப்பத்தைத் தருகின்றன என்றும், திட்டக் குழுவே உண்மை நிலை என்ன என்பதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் மக்கள் சபையின் திட்ட ஆலோசனைக் குழுவினர் தெரிவித்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

இரண்டாம் திட்டம் எந்த அளவு வெட்டப்படும் என்பது பற்றியும், திட்டத்தின் பிரதான அம்சங்கள் என்ற தலைப்பில்வரும் துறைகள் என்னென்ன என்பது பற்றியும் இப்போது திட்டமாகக் கூறுவதற்கு இல்லை என்றும், திட்டக்குழு, அந்த ஆலோசனைக் குழுவிற்குத் தந்துள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பல உறுப்பினர்கள் கேட்டதின் பேரில், ஆலோசனைக்குழு திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் முழுவதுமாக விவாதிக்க திட்ட மந்திரி சம்மதம் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

மத்திய ஆட்சி மொழி மாநாடு

பிரமுகர்கள் கலந்துகொள்வர்

சென்னை, டிச. 17—

மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி பற்றி விவாதிக்க சென்னை—மயிலை சீனிவாச சாஸ்திரி மண்டபத்தில் டிச. 22-ந் தேதியன்று டாக்டர் சி.பி. இராமசாமி (அய்யர்) தலைமையில் ஓர் மாநாடு கூட்டப்படும் எனத் தெரிகிறது.

மாநாட்டை திரு. மீர்சா இஸ்மாயில் திறந்துவைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. டாக்டர் எம். இரத்தினசாமி அவர்கள் தலைமையில் இதற்கான வரவேற்புக் குழுவும் அமைக்கப்பட்டு காரியங்கள் நடந்துவருகின்றன. பல அறிஞர்களும், மேதைகளும், அனுபவமிக்க அரசியல்வாதிகளும் மாநாட்டில் பங்குகொள்வார்கள்.

திரு. சி. இராசகோபாலாச்சார் மாநாட்டில் கலந்துகொண்டு முக்கிய தீர்மானத்தை முன்மொழிவார் என்று தெரியவருகிறது.

திரு. எஸ். செல்லசாமி மாநாட்டின் அமைப்பாளராக இருந்து ஆக்க வேலைகளைக் கவனித்து வருகிறார்.

தமிழ்நாட்டில் நெல் விளைச்சல்

ஒரு தகவல்

தமிழகத்தில் 1957—58-ல் நெல் சாகுபடி பற்றி சென்னை சர்க்கார் செய்தித்துறை இலாகா அறிவிப்பதாவது:—

இராமநாதபுரம், நீலகிரி கன்னியாகுமரி மாவட்டங்களைத் தவிர, மற்ற எல்லா மாவட்டங்களிலும் நெல் அறுவடை செய்யப்பட்டது. தஞ்சை மாவட்டத்தில் சாகுபடி பரப்பளவு அதிகம் இல்லை. எல்லா இடங்களிலும் மகசூல் பொதுப்படையாக சுமாராக இருந்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் கார் நெல் அறுவடை முடிந்துவிட்டது. நான்குனேரி வட்டத்தில் தவிர, மற்ற இடங்களில் மகசூல் சாதாரணமாக இருந்தது.

நிலுவையிலுள்ள பயிர், செங்கற்பட்டு, தென்னூற்காடு, தஞ்சை, மாவட்டம் ஆகியவைகளில் சில இடங்களில் பூச்சியால் பாதிக்கப்பட்டது; இதர மாவட்டங்களில் பொதுப்படையாக பயிர் நன்றாக இருக்கிறது. அண்மையில் பெய்த மழை, பெரும்பாலான மாவட்டங்களில் நிலுவையிலுள்ள பயிர்களுக்குப் பயனளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

துவரை சாகுபடி

தமிழ்நாட்டில், 1957 ஆகஸ்ட் 15-ந் தேதி வரையில் சுமார் 1,16,000 ஏக்கரில் துவரை பயிர் செய்யப்பட்டது; சென்ற ஆண்டில் இதே காலத்தில் பயிர் செய்யப்பட்ட 1,16,500 ஏக்கருடன் ஒப்பிடும்போது இது நான்கு சத விகிதம் குறைவு; என்றாலும், சென்ற 5 ஆண்டில் சராசரி சாகுபடி பரப்பளவு 1,06,800 ஏக்கருடன் ஒப்பிடும்போது இது 8 6 சத விகிதம் அதிகமாகும்.

தென்னூற்காடு, வடாற்காடு, சேலம், கோவை, திருச்சி மாவட்டங்களில்தான் துவரை முக்கியமாக சாகுபடி செய்யப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் இதன் சாகுபடி அதிகம் இல்லை.

தென்னூற்காடு, வடாற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் துவரை சாகுபடி பரப்பளவு குறைந்திருக்கிறது.

செங்கற்பட்டு, இராமநாதபுரம்; கன்னியாகுமரி மாவட்டங்களில் சென்ற ஆண்டு அளவே பயிரிடப்பட்டது; இதர மாவட்டங்களில் துவரை சாகுபடி பரப்பளவு அதிகரித்தது.

தென்னூற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் ஏக்கர் விகிதம் மகசூல் சாதாரண அளவுக்கும் சற்றுக் குன்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய மண்டலம்

ஒரு கண்ணோட்டம்

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அடங்கிய மத்திய மண்டலக் கவுன்சிலின் இரண்டாவது கூட்டம் 1958, ஜனவரி 1-ந் தேதி குவாலியரில் தொடங்கும்; மத்திய உள்நாட்டு அமைச்சர் கோவிந்த் வல்லப பந்த் தலைமை வகிப்பார்.

மத்திய மண்டலத்தில் மக்கள் தொகை 890 இலட்சம்; அதன் பரப்பளவு 284,600 சதுர மைல்; இப்பிரதேசத்தில், ஒரு சதுர மைலுக்குள்ள மக்கள் தொகை விகிதாச்சாரம் 314; அகில இந்திய சராசரி விகிதாச்சாரம் 284 ஆகும்.

இந்த மண்டல மக்கள்தொகை 80 சதவிகிதம் பேர் விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள்; அகில இந்தியாவில் இந்த அளவு 70 சதவிகிதம் ஆகும்

இந்த மண்டலத்தில் சாகுபடியாகும் 920 இலட்சம் ஏக்கரில்—780 இலட்சம் ஏக்கரில் அதாவது 83 சதவிகிதம்—உணவுத் தான்யங்கள் பயிரிடப்படுகின்றன.

கரும்பு விவசாயம் உத்தரப் பிரதேசத்தில்தான் அதிகம்; ஆனால் மத்தியப் பிரதேசத்தில்தான் பருத்தி பயிராகிறது. சணல் பயிராகும் 33,000 ஏக்கரும் உத்தரப் பிரதேசத்தில் இருக்கிறது.

உணவுப் பிரசினையில் அம்மண்டலம் சுயதேவைப் பூர்த்தியுடையதுதான். அங்கு 1957—58-ம் ஆண்டில் அதிகப்படியாய் சுமார் $9\frac{1}{2}$ இலட்சம் டன் உணவுத் தானியங்கள் உற்பத்தி செய்யபபடும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

பிலாய் எஃகுத் தொழிற்சாலையும், மத்தியப் பிரதேசத்திலுள்ள கனரக மின்சார உற்பத்திச் சாலையும் அங்கே மத்திய சர்க்காரின் முக்கியமான வேலைத் திட்டங்களாக இருக்கின்றன. அந்தத் திட்ட முதலீட்டின் மொத்த மதிப்பு ரூ. 444 கோடியாகும். இத்தொகையில் மாநிலங்கள் பங்கு ரூ. 162; உத்தரப் பிரதேசம் ரூ. 144·3 கோடியும், மத்தியப் பிரதேசம் ரூ. 47·7 கோடியும் அளிக்கும்.

பகுத்தறிவைப் புறக்கணியுங்கள்

நல்வாழ்விற்கு அதுவே வழி

நிதி அமைச்சர் கண்டுபிடிப்பு

சென்னை, டிச. 17—

"நாம் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்காக நம் முன்னோர்களும், சமயப் பெரியார்களும் வகுத்துக் கொடுத்த நன்னெறியை பகுத்தறிவின் பெயரால் புறக்கணிப்போமேயானால், நாம்தான் அல்லல்பட்டு அழிவோம்"

என்று, சென்னை மாநில நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் தர்மபுரம் ஆதீனம் தயாரித்துள்ள திருவெம்பாவைப் பாடல்கள் பதிவுச் செய்யப்பட்ட இசைத்தட்டுகள் வெளியீட்டு விழாவில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

கற்பைச் சோதிக்கவா இந்த முறை?

புதுடில்லி, டிச. 17—

"ஒரு பெண்ணின் கற்பைச் சோதிப்பதற்கு, பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்பு கையில் தரப்பட்டது உண்மையா?" என்று மக்கள் சபையில் கேள்வி ஒன்று கேட்கப்பட்டபோது, 'அப்படி ஒரு சம்பவம் நடந்திருப்பது உண்மைதான்; ஆனால், பெண்ணின் கற்பைச் சோதிக்க இந்த முறையைப் பின்பற்றுவதை அரசாங்கம் வன்மையாக கண்டிக்கிறது' என்று அமைசசர் தத்தார் தெரிவித்தார்.

சட்டபூர்வமாக அமையாத ஒரு மலைவாசிகள் பஞ்சாயத்தால் இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது.

துறைமுகங்கள் சீரமைப்பு

உலக பாங்கியிடம் கடன் கேட்டிருக்கிறார்களாம்!

சென்னை, விசாகப்பட்டினம், பம்பாய், கல்கத்தா ஆகிய துறைமுகங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்காக இந்திய அரசாங்கம் உலக பாங்கியிடம் ரூ. 38 கோடி வரை கடன் கேட்டுள்ளது என்று மக்கள் சபையில் அமைச்சர் இராஜ்பகதூர் தெரிவித்துளளார்.

இராமநாதபுரம் சம்பவங்கள்

தாழ்த்தப்பட்டோர் நல அதிகாரியின் அறிக்கை

மக்கள் சபை விவாதிக்க வேண்டுமென கோரிக்கை

புதுடில்லி, டிச. 17—

இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து தாழ்த்தப்பட்டோர் நலத்துறைத் தலைவர், சர்க்காருக்குத் தந்துள்ள அறிக்கைபற்றி மக்கள்சபை விவாதம் நடத்தவேண்டும் என்று பல உறுப்பினர்களும் கேட்டனர்; ஆனால், அது இரகசியமானது என்றும், அதனை விவாதத்திற்கு வைக்கமுடியாது என்றும் சர்க்கார் தரப்பில் கூறப்பட்டது.

சபைத் தலைவர், எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், அறிக்கை இரகசியமானதா இல்லையா என்பதுபற்றி, தாம் பின்னர் கூறுவதாகவும், தீர்ப்பு சாதகமாயிருந்தால் சபை அதனை விவாதிக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்.

கேள்விகளுக்குப் பதிலளித்த உதவி உள்நாட்டிலாகா மந்திரி திருமதி வயலட் ஆல்வா, அறிக்கை இப்போது குடியரசுத் தலைவருக்குச் சென்றிருப்பதாகக் கூறினார்.

சிவகாசி தொழிலாளருக்கு வீடுகட்ட உதவி தொகை

சர்க்கார் உதவியுடன் தொழிலாளர்களுக்கு வீடுகட்டித் தருவதற்கான திட்டத்தின்படி சிவகாசியிலுள்ள கார்னேஷன் வித்தோ தொழிலாளர் கூட்டுறவுத் தொழில்துறை வீடுகட்டும் நிறுவனத்துக்கு, மத்திய சர்க்கார் ரூ. 1,63,000 அனுமதித்திருக்கிறது; அது ஒற்றை அறை, ஒற்றை அடுக்குக் குடியிருப்புக் கட்டடங்கள்—50 கட்டுவதற்கு பயன்படுத்தப்படும்.

அந்தத் தொகையில் ரூ.82,500 கடனாகவும், ரூ. 41,250 உதவித் தொகையாகவும் மாநில சர்க்காருக்கு வழங்கப்படும்; மீதி ரூ. 41,250 மாநில் சர்க்கார், தங்கள் பங்குத் தொகையாகத் தர வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்ட அறுவடை!

புனா, டிச. 16—

கடந்த நான்காண்டுக் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உணவுத் தானியத்தின் மதிப்பு நீங்கலாக, கப்பல் கட்டணத்துக்கு மட்டும் ரூ. 70 கோடிக்குமேல் செலவிடப்பட்டிருப்பதாக மத்தியப் போக்குவரத்து அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து தேயிலை ஏற்றுமதி

உலகத் தேவையில் பாதியைப் பூர்த்தி செய்கிறதாம்

சென்னை, டிச. 16—

கனடாவில் இந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலை ஏராளமாகச் செலவழிகிறது என்றும், மேலும் இந்த விற்பனையை அதிகரிப்பதற்கு டெல்லி சர்க்கார் முயற்சித்து வருவதாகவும் தெரியவருகிறது.

கனடா தேயிலைக் குழுவின் நிர்வாக டைரக்டர் ஒருவர் தமிழ்நாட்டிற்கு வரும் ஜனவரியில் வருகிறார் என்றும், அவர், இங்கு மேலும் தேயிலை வாங்குவது பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவார் என்றும் தெரிகிறது.

உலகிலேயே அதிகமாக தேயிலை விளைவிப்பது இந்தியாதான் என்றும், உலகத் தேவையில் 50 சத விகிதத்தை இந்தியாதான் பூர்த்தி செய்கிறது என்றும் கூறப்படுகிறது.

கனடாவில் உபயோகிக்கப்படும் தேயிலையில், இந்தியாவே பெரும் பகுதி தருகிறது என்றும் கூறப்படுகிறது.

1956-ம் ஆண்டில் மட்டும் கனடாவிற்கு இங்கிருந்து 2,25,88,000 பவுண்டு தேயிலை (சுமார் ரூ. 6·52 கோடி மதிப்புடையது) ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும், மொத்தமாக எல்லா வெளிநாடுகளுக்குமாக 52,35,00,000 பவுண்டுபெறுமான தேயிலை ஏற்றுமதியானது என்றும் கூறப்படுகிறது.

கலால் வரியை மத்திய சர்க்கார் வசூலிக்கும் நிலை

புதுடில்லி, டிச. 17—

சர்க்கரை, புகையிலை, ஆலைத்துணி ஆகியவைகளுக்கான விற்பனைவரியை மாநில சர்க்கார்களே கொஞ்ச காலத்திற்கு வசூலிக்குமென்றும், தற்போதைய கையிருப்புகள் தீரும்வரையில் இந்த ஏற்பாடு இருக்குமென்றும், அதன் பின்னர்தான் புதிய முறைப்படி, அதிகப்படியான கலால் வரியை மத்திய சர்க்காரே வசூலிக்குமென்றும் நிதி அமைச்சர் டி. டி. கே., மக்கள் சபையில் கூறியுள்ளார்.

பன்மொழிப் புலவர் நிதி

கடந்த 5-12-57-ல் சென்னை—சேப்பாக்கம் லாக் நகரில் நடைபெற்ற சாமி படிப்பகப் பொதுக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதியவர்கள், தன்னிடம் அளிக்கப்பட்ட 25ரூபாயை பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் நிதியில் சேர்ப்பிக்குமாறு தோழர் மா. செங்குட்டுவன் மூலம் தலைமை நிலையத்துக்கு அனுப்பிவைத்தார்; தொகை, மேற்படி நிதியில் சேர்க்கப்பட்டது.

முகவரி

எஸ். எஸ். இராசேந்திரன்
'அண்ணா இல்லம்'
11-B, புதுத்தெரு,
எச். டி. ராஜாநகர்,
சென்னை-18.

* * *

பல்லடம் பொன்னுசாமி
திருமூர்த்தி மில்ஸ் பக்கம்
உடுமலை

★★★

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு

27, 28-12-57 வெள்ளி, சனிக்கிழமைகளில்

நாகர்கோவிலை அடுத்த கிருஷ்ணன் கோவிலில்

கலைவாணர் பந்தலில்—சாமி அரங்கில் நடைபெறும்.

★

தலைவர்: ஈ. வெ. கி. சம்பத் M.P. | திறப்பாளர்: டாக்டர் ஏ. அருணாசலம்

★

அண்ணா, போதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் பங்கேற்கின்றனர்.

முதல் நாள்:
27—12—57 வெள்ளி இரவு
எம். கே. கோவிந்தராச பாகவதர்
(எம். கே. தியாகராச பாகவதர் இளவல்)
அவர்களின தீந்தமிழ்ப் பாடல்கள் மக்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தும்.

இரண்டாம் நாள்:
28—12—57 சனி இரவு
தோழமை நாடக மன்றத்தாரின்
'மனித இதயம்'
(கதை—வசனம்: ஆர். ஜார்ஜ்)
எனும் நாடகம் மக்களின் இதயத்தைத் தொட்டு, உற்சாகத்தின் எல்லைக்கு அழைத்துச் செல்லும்.

கரங்கூப்பி, ஒளிமுகங்காட்டி, குமரிமுனை உங்களை அழைக்கிறது;
அனைவரும் கூடுங்கள்; விடுதலை முரசு கொட்டுங்கள்!

ஏ. இராமசாமி, பி. சாம் B.A., B.L.
செயலாளர்கள்

கி. மனோகரன் M.A.
வரவேற்புக்குழுத் தலைவர்

★★★

இந்தியாவுக்கு ஜப்பான் கடன் தரும்?

நிலைமை ஆராயப்படுகிறதாம்!

டோக்கியோ, டிச. 18—

இந்தியாவுக்கு 1,800 கோடி யென் (ஜாப் நாணயம்) கடன் கொடுப்பது பற்றி ஜப்பான் ஆராய்ந்து வருகிறது என்று, அயல்நாட்டு அமைச்சர் பூஜியாமா தெரிவித்துள்ளார்.

இந்தக் கடன் தொகை 7 முதல் 10 ஆண்டுக்காலத்தில் 5 சத விகித வட்டி விகிதத்தில் திருப்பித் தரப்பட வேண்டும்.

இந்தியாவுடன் வர்த்தக, நிதி அளித்தல் ஆகியவற்றை ஜப்பான் தீவிரப்படுத்திக் கொள்ளுமாம்.

சரித்திரத்திலேயே முதல் தடவையாம்!

ரஷ்யாவுக்கும்—ஜப்பானுக்கும் சரித்திரத்திலேயே முதல் தடவையாக வர்த்தகக் கப்பல் போக்குவரத்து உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் 5 ஆண்டுகளுக்குஅமுலில் இருக்கும்.

சபைத் தலைவரின் உத்தரவு

மீறுவோருக்குக் கடுமையான எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 18—

"உட்காருமாறு சொல்லிவிட்ட பின்னும் உட்காரமல் பேசிக்கொண்டிருப்பவர்கள், பிறர் பேசிக்கொண்டிருக்கும்போது, ஓயாது குறுக்கிடுபவர்கள்—இவர்கள் எல்லாம், அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பேசுவதற்கே சந்தர்ப்பம் தரப்படமாட்டார்கள் என்ற சபை விதியை நான் கடுமையாக அமுல் செய்ய வேண்டியிருக்கும்"

என்று, மக்கள் சபைத் தலைவர் எம். அனந்தசயனம் அய்யங்கார் இன்று எச்சரித்தார்.

அடுத்த கேள்விக்குச் சென்ற பின்னும், முன்னைய இராமநாதபுரம் சம்பவங்கள் பற்றிய கேள்வி மீது உப கேள்விகளை பல உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுப்பியபோதே சபைத் தலைவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

தாமோதர் திட்ட நிறுவனத் தலைவர் மீது குற்றச்சாட்டு

மாநிலங்கள் சபையில் மந்திரி பதில்

புதுடில்லி, டிச. 18—

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்ட நிறுவனத்தின் தலைவர் மீது எழுப்பப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளையும் தாம் பரிசீலித்துப் பார்த்ததாகவும், அவற்றிற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்று தான் கண்டதாகவும், நீர்ப்பாசன இலாகா மந்திரி எஸ். கே. படீல், மாநிலங்கள் சபையில் கூறியிருக்கிறார்.

"குற்றம் புரிந்ததாகவோ, சந்தேகப்படும் வகையிலோ அந்த நிறுவனத்தின் எந்த அதிகாரியாவது நடந்துகொண்டார் என்று நிரூபித்துக்காட்டுங்கள்; அப்போது நான் ஒப்புக்கொள்ளும் நடவடிக்கையைப் பாருங்கள்" என்றும் அவர் கூறினார்.

நிறுவனத்தின் தலைவர்பற்றி ஒரு வங்காளிப் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்ததை அவர் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது தான், அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தாமோதர் திட்ட நிறுவனச் சட்டத்தில், நிறுவனத்தில் முழுநோ அல்லது பகுதிநோ ஊழியர்களை நியமிக்க சர்க்காருக்கு அதிகாரம் வழங்கும் திருத்தம் ஒன்று நிறைவேறியது.

தூத்துக்குடியில் சிறப்புக் கூட்டம்

"22—12—57 மாலை 4-மணியளவில், தூத்துக்குடியில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெறும். தோழர் கே. ஆர். இராமலிங்கம் தலைமை வகிப்பார்; தோழர்கள் கே. ஏ. மதியழகன், கண்ணதாசன், என். எஸ். இளங்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

"சிறப்புக் கூட்டத்தையொட்டி தோழர் அருணாசலத்தின் விளையாட்டு வித்தைகள், 'ஸ்டண்ட்' காட்சிகள் நடைபெறும்.

"நாஞ்சில் மாவட்ட மாநாட்டிற்கு அனுப்பப்படவிருக்கும் கே. வி. கே. சாமியின் ஆறடி உயர உருவம் காட்சிக்கு வைக்கப்படும்"

என, நகரச் செயலாளர் ஜோசப் அறிவிக்கிறார்.

வெள்ளை மாணவர் வெறியாட்டம்!

லிட்டில்ராக், டிச. 19—

அமெரிக்காவின் ஒரு மாநிலமான அர்கன்சாவிலுள்ள லிட்டில்ராக் நகரத்தில் ஒரு நீக்ரோ மாணவியை வெள்ளை மாணவர்கள் தடுத்து அவமதித்தனராம்; அப்பெண், அந்த வெள்ளை மாணவர்கள்மீது தன் உணவுத் தட்டை எறிந்தாள் என்ற குற்றத்திற்காக அம்மாணவியை பள்ளி அதிகாரிகள் மூன்று நாட்களுக்கு வரக்கூடாது என்று தண்டித்துள்ளனராம். வெள்ளை மாணவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

'சட்டவிரோதமல்ல' எனத் தீர்ப்பு

இலட்சுமணபுரி, டிச. 18—

'தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் லோகியாவை, காவலில் வைத்திருப்பது சட்டவிரோதமாகாது' என்று, அலகாபாத் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலஞ்சப் பழக்கத்திற்கு ஆளான அதிகாரிகள்

நான்கு மாதங்களில் 332 பேர் சிக்கினராம்!

புதுடில்லி, டிச. 18—

மத்திய சர்க்கார் இலாகாவில் இலஞ்ச ஊழல் எவ்வளவு கோரத் தாண்டவமாடுகிறது என்பதை, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை காட்டுகிறது.

கடந்த நான்கு மாதங்களில்—1957 ஆகஸ்டு முதல் நவம்பர் முடிய—மத்திய ஸ்பெஷல் போலீசார் வலை வீசியதில், இலஞ்சப் பழக்கமுடைய 332 அதிகாரிகள் சிக்கினர் என்றும், 237 வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் தெரியவருகிறது.

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள மத்திய சர்க்கார் அதிகாரிகளில், 52 பேர் கெஜட் பதிவு பெற்ற உயர் அதிகாரிகளாம்!

இந்தத் தகவல்களை, உள்நாட்டு இலாகா மந்திரி, தத்தார் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஊழியர்கட்கு கிராக்கிப் படி உயர்வு

மத்திய சர்க்காருக்கு அதிக செலவு

மாதம் ஒரு கோடி ரூபாயாகும்

புதுடில்லி, டிச. 18—

ரூ. 250-க்குக் குறைவாக ஊதியம் பெறும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குக் 'கிராக்கிப் படி'யில் ரூ. 5 உயர்வு தர வேண்டும் என்ற இரண்டாவது சம்பளக் கமிஷனின் சிபாரிசுகளை அமுல் செய்ய இரயில்வே இலாகாவிற்கு மட்டும் ரூ. 50 இலட்சம் மாதந்தோறும் அதிகம் தேவைப்படும் என்று தெரிகிறது.

மொத்தமாக மத்திய சர்க்காருக்கு மாதந்தோறும் ஒரு கோடி ரூபாய் அதிகம் செலவு ஏற்படுமென்று கூறப்படுகிறது. மத்திய சர்க்காரில் மொத்தம் 16 25 இலட்சம் சிவில் ஊழியர்கள் உள்ளனர் என்றும், இதில் 65 சதவிகிதத்தினர் இரயில்வே இலாகாவினர் என்றும், இது வன்னியில், தற்காப்பு இலாகாவில் $3\frac{1}{2}$ இலட்சம் ஊழியர்கள் உள்ளனர் என்றும், இதையும் சேர்த்தால் மத்திய சர்க்கார் ஊழியர்களின் எண்ணிக்கை 20 இலட்சமாகும் என்றும் கூறப்படுகிறது.

மண்டல ஏற்பாடு பலன் ஏதும் தரவில்லை

மந்திரி பக்தவத்சலம் கூறுகிறார்

சென்னை, டிச. 18—

மத்திய சர்க்காருக்காக, வரும் மாதத்திய அறுவடையின் போது தமிழ் நாட்டில் சென்னை சர்க்கார் ஒரு இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்போவதாக மந்திரி பக்தவத்சலம் அறிவித்திருக்கிறார்.

தஞ்சையிலிருந்து தொடர்ந்து அரிசி கேரளத்திற்குப் போய்க் கொண்டிருப்பதாகவும், இதைத் தடுத்து, மாநிலத்திற்கு உணவு சப்ளையை நிலைப்படுத்த உதவி ஏற்பாடு வேண்டும் என்றும், மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கேட்டிருக்கிறதாம்!

உணவுத் துறையைப் பொறுத்தவரையில், மண்டல ஏற்பாடு எந்தவகையிலும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்றும், ஆந்திரத்திலிருந்து தமிழ் நாட்டிற்கோ, கேரளத்திற்கோ எதிர்பார்த்தபடி அரிசி கிடைக்கவில்லை என்றும், ஆனால் ஆந்திரத்திலிருந்து மண்டலத்திற்கு வெளியே அரிசி போகாமல் தடுக்கமட்டுமே அந்த ஏற்பாடு உதவியுள்ளது என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

இப்போது மத்திய சர்க்கார் ஆந்திராவில் உபரியாகக் கிடைக்கும் அரிசியைத் தாங்களே கொள்முதல் செய்துவருகின்றனர் என்றும் தெரியவருகிறது.

என்ன காரணமோ?

எகிப்திடம் 1-இலட்சம் டன் அரிசி வேண்டும் என்று இந்திய அரசாங்கம் கேட்டிருந்ததாம்; ஏற்றுமதி செய்யும் அரிசியும் கைவசம் இருந்ததாம், ஆனால், இந்தியாவைத் தவிர ஏழு நாடுகளுக்கு எகிப்து 4-இலட்சம் டன் அரிசியை ஏற்றுமதி செய்துள்ளதாம். அந்த நாடுகள்—ஜப்பான் ரஷ்யா, இந்தோனேஷியா, இலங்கை, சிரியா, பெல்ஜியம், ஆஸ்திரியா, மேற்கு ஜெர்மனி யாகும்.

இந்தியப் பேரரசுக்கு ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறையை ஈடுசெய்ய கொழும்பு திட்டத்தின் கீழ் இந்தியாவுக்கு 1,10,000 டன் கோதுமையைத் தர கனடா முன் வந்துள்ளதாம். முதல் பகுதியாக 11,400 டன் கோதுமை பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்துள்ளது.

பர்மாவாழ் இந்தியர் நிலை

இரட்டைக் குடியுரிமையை ஏற்க இயலாதாம்!

கல்கத்தா, டிச. 18—

பர்மாவில் வாழும் இந்தியர்கள் பிரச்சினையைத் தீர்க்க இரட்டைக் குடியுரிமையைப் பின்பற்றித் தீர்வு காண பர்மா அரசாங்கம் முன்வராது என்று பர்மா பிரதமர் யூ-நூ தெரிவித்துள்ளார்,

எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் விஷயத்திலும் இரட்டைக் குடியுரிமை முறையைப் பர்மா ஏற்காது என்று அவர் குறிப்பிட்டார்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை 12-வது வட்டம்
வேலாயுதம் சந்து
(ஆர்பர் அருகில்)
21—12—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு
தலைவர்: வீ. முனுசாமி எம். சி.
பேசுவோர்:
அண்ணா
என். சீவரத்தினம்
தமிழழகன்
இன்னிசை:
டேப்-இராதாமாணிக்கம்
எஸ். கமலா

★

திருச்சி
டவுன் ஆல் மைதானத்தில்
21—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: அன்பில்-தருமலிங்கம்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எம். எஸ். மணி
எஸ். நெடுமாறன்
டி. பி. அழகமுத்து

★

வேம்படி தாளம்:
21—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர்: டி. வெங்கடகிருஷ்ணன்
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

தாரமங்கலம்
தெண்டிகேஸ்வரம் சாவடி
மைதானத்தில்
21—12—57 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு
தலைவர்: கே. பி. குப்புசாமி
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
ஈ. ஆர். கிருஷ்ணன்
ப. கண்ணன்

★

பட்டீச்சுரம்
கடைத் தெருவில்
21—12—57 மாலை 6-மணிக்கு
தலைவர்: வி. ஆர். வரதராசன்
பேசுபவர்:
ஏ.வி.பி.ஆசைத்தம்பிஎம்.எல்.ஏ.

அண்ணா விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காக ஒருவரை, அவர் குடியிருக்கும் தெருவிலிருந்து மற்றவர்கள் துரத்திவிடக்கூடாது.

"பெரியார் சிறையிலிருந்து வருவதற்குள் எல்லா அரசியல் கட்சிகளிலுமுள்ளமுற்போக்குவாதிகளும் ஒன்றாக உட்கார்ந்து பேசி சாதிகளை ஒழிக்கத் திட்டம் வகுத்தாகவேண்டும். இம்மாதிரி செய்தால் தான் பெரியார் சிறைக்குச் சென்றதற்கு ஒரு பலனிருக்கும்.

"'பார்ப்பனர்களைக் கொல்லுமாறு நான் சொல்லவில்லை' என்று பெரியார் மறுத்துக் கூறியிருப்பதால், நாகரீகமுள்ள சர்க்காராக இருந்தால் பெரியாரை நிபந்தனையின்றி விடுதலை செய்யவேண்டும்.

"'சட்டத்துக்கு உட்பட்டு நடக்க வேண்டும்' என்று—சட்டத்துக்கு மதிப்புகொடுத்து நடப்பதில் பெரியாரைப்போல் தமிழ் நாட்டில் வேறு யாரும் இருக்கமுடியாது.

"பெரியாரை நேரு திட்டியதால், தமிழ்நாட்டு மக்களின் மதிப்பை நேரு இழந்துவிட்டார்.

"நேருவுககுப்பின் காமராசரோ அல்லது காங்கிரசோ வாழ முடியாது. நேரு இருக்கும்வரைதான் காங்கிரசின் அதிகாரமும், காமராசர் பதவியில் இருப்பதும் முடியும்."

சொற்பயிற்சிக் கூட்டம்

20-12-57 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு, சென்னை-புதுவண்ணை வள்ளுவர் மன்றத்தில், தோழர் இளந்தென்றல் தலைமையில், 'திராவிடம் ஏன் தாழ்ந்தது?' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை 18-வது வட்ட மதிவளர்ச்சி மன்றத் திறப்புவிழா

கண்ணதாசன் கலந்துகொள்வார்.

21—12—57 மாலை 5-30 மணிக்கு, சென்னை—புளியந்தோப்பு கிரே நகரில், தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் மேற்படி மன்றத் திறப்புவிழா நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், எஸ். எஸ். தென்னரசு, ஆர். ஜார்ஜ், கே. சுப்பிரமணி ஆகியோர் பேசுவர்.

சென்னை 4-வது வட்ட இளைஞர் முன்னேற்றமன்ற உறுப்பினர்கட்கு:

20—12—57 இரவு 8-மணிக்கு மேற்படி மன்ற உறுப்பினர்கள் கூட்டம், மன்றப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்; திராவிடர் திருநாள் கொண்டாடுவதுபற்றி முடிவு செய்யப்படும்.

சென்னையில் பூங்காட்சி ஏற்பாடுகள்

1958 பிப்ரவரி திங்களில் நடைபெறவிருக்கும் 'பூக்காட்சி' நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு, 1—1—58 முதல் சென்னை, பீப்பிள்ஸ் பார்க்கிலுள்ள 'மைலேடீஸ்' பூங்கா மூடப்பட்டிருக்கும்; பொதுமக்கள் உள்ளே அனுமதிக்கப்படமாட்டார்கள் என நகரசபையார் அறிவிக்கின்றனர்.

சென்னை—தூளை நகர இளைஞர் கழகம்

20—12—57 மாலை 6-30 மணிக்கு, எண்-10. மாணிக்கச் செட்டித் தெரு கழக மனையில், திரு. எஸ். எம். பாசில், 'இந்தியாவின் மொழிப் பிரச்சினை' என்பது பற்றிப் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.